**செய்தி வெளியீடு எண்: 180** **நாள்: 09.03.2018**

**மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள் தலைமையில் தெலுங்கானா சாகித்ய அகாதமி தலைவர், செயலாளர் மற்றும் தெலுங்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சந்திப்பு.**

09/03/2018, வெள்ளிக்கிழமை காலை, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, பண்பாடு மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் தலைமையில், தலைமைச் செயலகத்தில், தெலுங்கானா சாகித்ய அகாதமியின் தலைவர் ஸ்ரீ.நந்தினி சித்தாரெட்டி செயலாளர் முனைவர்.ஏ.நரசிம்மரெட்டி மற்றும் தெலுங்குப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் திரு. எஸ்.வி. சத்தியநாராயணா மற்றும் தமிழ்நாடு கலை பண்பாட்டு ஆணையர், தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்–செயலாளர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், உலகத்தமிழ்ச்சங்க இயக்குநர், மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர், தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஆகியோர் கலந்து கொண்டு தமிழ் மொழி மற்றும் தெலுங்கு மொழியின் ஒற்றுமைக் கூறுகள், பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பாக விவாதித்தனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், “தமிழ்நாட்டில் விரைவாக சாகித்ய அகாதமி அரசு உதவியுடன் தொடங்கப்படும் என்றும், மத்திய அரசின் ‘ஒன்றே பாரதம், ஒப்பிலா பாரதம்’ திட்டத்தின்கீழ், தெலுங்கானா மாநிலத்திற்கும், தமிழ் நாட்டிற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்” என்றும், “தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்துடனும், தமிழ்ப் பல்கலைக்கழகத்துடனும், தெலுங்குப் பல்கலைக்கழகம், மொழி, கலை, இசை, பண்பாடு குறித்த ஆய்வினை மேற்கொள்ளப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படும்”, எனவும் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**